31. பெரியார் காட்டும் பெண்ணியச் சிந்தனைகள்

முனைவர் ம.கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர்-641 043.

உலக மக்கள் தொகையில் செம்பாதி பெண்கள். பெண்ணும் ஆணும் கூடி வாழும் நிலையே சமுதாயமாகும். சமுதாயத்தின் ஓர் அங்கமான, பெண் பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை அறிவு, ஆற்றல், ஆளுமை, அன்பு, ஒப்புரவு, தொண்டு என்ற நிலைகளில் மேலோங்கியிருந்தும் அவளுக்குச் சமஉரிமை கொடுக்கப்படவில்லை. இவ்வுரிமையைப் பெறவேண்டும் என்பதே பெண்ணியச் சிந்தனையாளர்கள் கருத்தாகும். பெண் என்பவள் குழந்தைப் பருவத்தில் தாய்தந்தை பாதுகாப்பிலும் திருமணமான பிறகு கணவனின் ஆதரவிலும் முதுமைப் பருவத்தில் மகன் உதவியிலும் வாழ வேண்டும் நிலையினைக் காணமுடிகின்றது. கல்வி கற்றுத்தரும் நிலையிலும் பாகுபாடு மற்றும் கணவனைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் பெற்றோர் விரும்பும் ஆடவனை மணக்கும் நிலையே இன்றும் பெரும்பாலான குடும்பங்களில் நிலவி வருகிறது. பெண் ஆண் என்ற வேறுபாடு இல்லாத, மிக உன்னதமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்என விரும்பிய பெரியாரின் பெண்ணியச்சிந்தனைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியார் காலப் பெண்களின் நிலை

நம் இந்தியா இன்றும் வளர்ச்சி நிலையிலேயே உள்ளது. இந்தியப்பெண்கள் கல்வியறிவில் பின்தங்கியவர்கள். அவர்களுக்குக் குடும்பக் கலை, கும்மி ,கோலாட்டம், பாட்டு இவை தவிர அறிவு வளர்க்கும் கல்வி அளிக்கப் பெறவில்லை. சொத்துரிமை இல்லை. பெண்கள் பிள்ளை பெறும் இந்திரமாக இருக்கிறார்கள். பெண் இளம் வயது திருமணமாவதால் விரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்துபடுகின்ற நிலையைச் காணமுடிகின்றது. சிசு மரணத்தைத் தடைசெய்யும் சாரதா சட்டத்தினால் இக்கொடுமை களையப்பட்டுள்ளது.

விதவைத் தன்மை பெண்ணுக்கு செய்யப்படும் மற்றொரு கொடுமையாகும். பெண் மறுமணம் செய்யக்கூடாது. விவாகரத்தும் எளிதில் கிடைக்காது. பெண் கணவனால் விலக்கப்பட்டால் ஜீவனாம்சம் என்ற உதவிப்பணம்பெறலாம். கணவனின் சுதந்திர வாழ்வில் மனைவி குறுக்கிடமுடியாது. ஆண்மகன் தன் தாய்க்கு வயதானால் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு மணம் செய்து ஒரு பெண்ணைக் கொணரும் போக்கும் உண்டு. ஆண்களைப் போன்றுபெண்கள் பல துறைகளிலும் கல்வி பெறவோ பதவி பெறவோ முடியாது. படித்த பெண்கள் ஆக்கமுறையில் தங்கள் கல்வியைப் பயன்படுத்தவில்லை. கணவன் நிழலில் அவன் புகழில் அவர்கள் ஒதுங்கிவிடுகிறார்கள். நகை துணி இவற்றில் பற்றுடையவர்களாய்ப் பொதுநோக்கின்றி உலகைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தனர். பொதுப்பணி அவர்கள் அறியாத ஒன்றாக இருந்தது. பரத்தமை சமூக அனுமதியுடன் நடந்து வருகின்றது. இதனைச் சட்டமியற்றி அரசு தடுத்துள்ளது. கல்வியின்மை சொத்தின்மை விவாகரத்தின்மை, விதவை மணமின்மை, சுதந்திரமின்மை போன்ற அவலநிலையில் பெண்கள் தள்ளப்பட்டிருந்தனர். இந்நிலையிலிருந்து பெண்களை மீட்டெடுக்க அரசு பல சட்டங்கள் இயற்றியும் அடிமைத் தளையிலிருந்து நீங்கும் மனநிலையற்றவர்களாக/அடிமைத் பெண்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். இதனை அறிந்த பெரியார் பெண்கள் மாற்றம் பெறவேண்டும் என பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

பெண்ணடிமை

உலகில் ஆண்மை இருக்கும் வரையில் பெண்ணடிமையும் வளர்ந்து கொண்டே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலன்றிப் பெண்மை விடுதலையடையாது. ஆண்மையும் பெண்ணடிடையும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதாக ஆண்கள் கருதுகிறார்கள். அதைப் பெண்கள் நம்புகிறார்கள். தாங்கள் முழுவிடுதலைக்குரியவர்கள் என்ற எண்ணம் இன்னமும் பெண்களுக்குத் தோன்றவில்லை. சுதந்திரம் வீரம் இவை ஆண்களுக்குத் துணைபுரிகின்றன. ஆனால் திருமணம் செய்து கொள்வதே பெண்களின் அடிமை வாழ்விற்கு அடிகோலுவதாகி விடுகிறது. பெண்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் ஆண்களின் பல துக்கங்கள் குறைந்துபோகும் பெண் அடிமையானால் இந்தியக் குடிமக்கள் அடிமைகள் ஆகிறார்கள் தீண்டாமை, பெண்ணடிமை இவை இரண்டும் இந்தியாவை விட்டு நீக்கப்பட வேண்டியவை. இந்தியா

உலகத்தில் முன்னிலையில் நிற்கப் பெண்விடுதலை வேண்டும். ஆண்டான் அடிமைத் தத்துவத்தை விட மோசமானது பெண்ணடிமைத்தனம். உலகத்தில் அடிமைத்தத்துவம் ஒழிய பெண்ணடிமை ஒழிய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

கல்வியின் மேன்மை

பெண்கள் அனைவரும் கல்வி பெறவேண்டும். கல்வியறிவின்மையே பெண்களை அலங்காரப் பதுமைகளாகவும், நகைப்பெட்டகங்களாகவும் ஆக்கியிருக்கிறது. கற்ற பெண்களையே ஆண்கள் மணக்க வேண்டும். கல்லாத பெண்கள் கன்னியாகவே இருத்தல் வேண்டும். பெண்கள் ஒழுக்கங்கெடக் கல்வி காரணம் என்ற போக்கு மாறவேண்டும். பெண்களுக்கு அறிவாற்றல் இல்லை என்று காரணம் காட்டிப் பெண்ணடிமையைப் புகுத்துவதற்காகவே பெண்கல்வி மறுக்கப்படுகிறது. அடுப்பும் கட்டிலும் மருத்துவச் சாலையும் பெண்களின் வாழ்விடங்கள் என்ற நிலை மாறி கல்விச்சாலைகளில் பெண்கள் பயிலவேண்டும். ஆணும் பெண்ணும்சேர்ந்து பயின்றால் பல தீங்குகள் அகலும். அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி இருபாலர்க்கும் பொதுவானது. பெண்கள் ஓடவும் தாண்டவும், மல்யுத்தம் செய்யவும் பழகவேண்டும். பெண்கள் ஆண்களைப் போலவே உடல்வலிமை பெற வேண்டும். உடற்பயிற்சி, படைக்கலப்பயிற்சி இவற்றை மேற்கொள்ள வேண்டும். தன்மானத்தை பாதிக்கக்கூடிய எந்தக் கட்டத்திலும் பெண்கள் போராட இந்தப் பயிற்சிகள் பயன்படும். அவர்கள் படையில் சேர்ந்து நாட்டுப்பணி புரிய வேண்டும். தொழிற்கல்வியும் பெற வேண்டும். நிர்வாகத்திலும் அரசியலிலும் அவர்கள் உயர்பதவி பெற வேண்டும் என வலியுறுத்தினார். பெற்றோர் ஆண்களைப் படிக்கவைக்காவிட்டாலும் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். அந்த வகையில் முன்னோர்கள் வாழ்ந்ததை விடச் சிறப்பாக வாழ்ந்து பெண்கள் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்றும் கூறினார்.

வேலைவாய்ப்பு நிலை

ஆண்களுக்கு இருக்கிற வேலைவாய்ப்புகள் பெண்களுக்கு இல்லை. பெண்கள் சமையலறையை விட்டு வெளியே வரவேண்டுமானால் திருமணம் சிக்கல்கள் ஒழிக்கப்படவேண்டுமானால் பெண்கள் வேலையில் சேரவேண்டும். மக்கள்தொகை விகிதப்படி பெண்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும். படித்த பெண்கள் கணவன் நிழலில் புகழில் ஒதுங்கித் தன்மானமற்ற வாழ்க்கை

வாழ்கின்றனர். வேலை செய்யப்பயன்படாத கல்வி வீணாகிறது. அத்தகைய பெண்கள் படிக்கவே வேண்டாம். பெண்களுக்கு எல்லாவகையான வசதிகளும் வாய்ப்புகளும் கொடுக்கப்பட்டால் அவளும் ஆண்களைப் போல எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து வெற்றிபெறுவாள் என்று கூறினார்.

சொத்துரிமை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெரியோர் கூறிவரும் பழக்கம் என்பதால் ஆண்களுக்குச் சொத்துரிமை உண்டு. பெண்களுக்கு இல்லை என்று கூறுவது தவறு. பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று இந்திய அரசு சட்டம் கொண்டு வந்தது போற்றுதலுக்குரியது. பெண்கள் முன்னேற அவர்களுக்கும் சொத்துரிமை வேண்டும். கணவனை விட்டு விலகிவாழும் பெண்ணுக்கு வாழ்க்கைப்பணம் அளிக்கப்படுகிறது. விதவை கணவனின் சொத்தை அடையலாம் மறுமணம் செய்து கொண்டால் அவளுக்கு அந்த சொத்தில் உரிமை இல்லை என்ற நிலை மாற வேண்டும். பெண்களுக்குப் பெற்றோர் செல்வத்தில் உரிமை இருப்பதால் வரதட்சணை வாங்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்று கூறினார்.

திருமண வாழ்க்கை

ஆணும், பெண்ணும் இயற்கை இன்பம் நுகர வாழ்க்கைத் துன்பத்தில் இளைப்பாற ஏற்பட்டதே திருமணம். இது மணமக்கள் முயற்சியால் ஏற்படவேண்டும். திருமண வாழ்வில் சமத்துவம் வேண்டும். அடிமை வாழ்வோ மேல்கீழ் வாழ்வோ கூடாது. திருமணம் தெய்வீகத் தன்மை உடையதன்று. மனித வாழ்வில் வேறு எந்நிகழ்ச்சியையும் விட திருமணமானது தெளிவானதாகவும் சுதந்திரமானதாகவும் அமைய வேண்டும். உணவு, உடை, இவைகளுக்காக ஒரு பெண் ஆணை மணந்தாளெனில் அவள் வேறு எந்த உரிமையும் பெற இயலாதவள் ஆகிறாள். திருமணம் வாழ்க்கை இன்பம் பெறவே ஏற்பட்டது. அடிமைத்தனத்தைப் புகுத்துவதன்று. உறவுமுறைத் திருமணங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. கலப்புமணம், விதவைமணம், மறுமணம், மதம் மாறிய மணம், பரத்தையரை மணத்தல் இவை தேவையானவை என்றும் ஆனால் குழந்தை மணம் கூடாதென்றும் வலியுறுத்துகிறார்

கல்யாணம், திருமணம் என்ற சொற்களை விட வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்ற சொல்லே ஏற்புடையது. வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் என்பது இரு நண்பர் சேர்ந்து நடத்தும் கூட்டு வாழ்க்கை

என்ற பொருளைத் தருகிறது. இனிவரும் நாட்களில் மணமுறைகள் மாறலாம். மணமக்கள் திருமணத்திற்குப் பிறகு அதனைக் கடிதவழியோ அல்லது செய்தித்தாட்கள் வழியோ உறவினர்களுக்கு அறிவிக்கும் காலம் வரும். திருமணத்தை அஞ்சல் வழி பதிவு செய்யும் காலமும் வரலாம். பதிவுத் திருமணம் சட்டமாக்கப்பட்டுவிட்டால் பாராட்டுக் கூட்டத்துடன் திருமணம் முடியும். புரோகிதர் நாள்கோள் பார்த்தல், தீ வலம் வரல், அம்மிமிதித்தல், தாலி கட்டுதல் ஆகிய சடங்ககள் இன்றி மணமக்கள் மணமொப்பி ஒரவரை ஒருவர் தேர்ந்தெடுத்துப் பெரியவர் ஒருவர் ஆசியுடன் செய்யும் மன ஒப்பந்தம் சுயமரியாதைத் திருமணம் என்றழைக்கப்படுகிறது. இது தொடக்ககாலத்தில் சட்டப்படி மறுக்கப்பட்டு பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாலிகட்டும் பழக்கம் பெண்கள் அடிமைகள் தன்மானமற்றோர் என்பதைச் சுட்டுகிறது. திருமனமானவள் என்று அடையாளங்காட்டத் தாலி கட்டுவதாயின் ஆண்களும் இதனைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

வரதட்சணை

பெண்ணின் சொத்துரிமை காரணமாக அவளுக்குரிய பொருள் அவளைச் சாரும். வரதட்சணை என்று தனியே பெறல் வேண்டாம். தங்கள் படிப்பையும், காதலையும், தகுதிகளையும் இளைஞர் விலைபேச வேண்டாம். இந்தச் சுரண்டல் முறையால் பலபெண்கள் திருமணமின்றி இருக்கின்றனர் என வேதனையுடன் வெளிப்படுத்துகிறார்.

விவாகரத்து: மறுமணம்

ஆண் பெண் இருபாலர்க்கும் மனநிறைவும் உண்மைக் காதலும் ஒழுக்கமும் ஏற்பட இருவரும் மணமுறிவு செய்யும் உரிமை பெற வேண்டும். இன்றேல் இருவரும் சுதந்திர வாழ்வை பெற்றவராக முடியாது. இவ்வுரிமை இருபாலருக்கும் நன்மை பயக்கும் எனினும் பெண்களுக்கே மிகவும் பாதுகாப்பானது. மதங்கள் மறுமணத்தை தடுக்கவில்லை காதல் ஒருவரிடம்தான் இருக்கும் என்பதும் முரண்பாடான கருத்தாகும். இருபாலர்க்கும் மணமுறிவு செய்யும் உரிமையும், மறுமணம் செய்யும் உரிமையும் வழங்கப்பெறல் வேண்டும். சமுதாயம் இதனைப் பெண்ணுக்கு மறுப்பது நீதியற்ற செயலாகும் என்று குறிப்பிடுகின்றார்.

சுதந்திர வாழ்க்கை

பெண்களைப் படிக்க வைத்து சொத்துரிமை கொடுக்க வேண்டும். கல்வியும் செல்வமுமற்றப் பெண்களைளால் அறிவும்நிறைவும் உள்ள

பிள்ளைகளைப் பெற இயலாது. பொருளீட்டல், குடும்பப் பொறுப்பு, குழந்தை வளர்ப்பு இவையனைத்தையும் பெண் செய்யமுடியும் என்ற நிலையடைந்தால்தான் அவள் ஆணுக்குச் சமமான நிலை அடைகிறாள். பெண்களுக்குப் பதினாறு வயது வரை கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும் . இயற்கைக்கு மாறான அடக்கம், அடிமை உணர்ச்சி இவற்றைக் கற்பிக்கக் கூடாது. பெண்களைக் கீழ்மைப்படுத்தும் கருத்துக்களையோ, சமயக் கொள்கைகளையோ, கதைகளையோ வழங்கக்கூடாது.

இன்றைய வளர்ந்து வரும் அறிவியல் உலகில் பெண்கள் பலதுறைக் கல்வியும், பலதுறைப் பதவிகளையும் பெற்றுள்ளனர். கல்வியில் முன்னுரிமை பெறுவதோடு சொத்துரிமையும் வழங்கப்பட்டுள்ளது. மணமொத்த திருமணம், மணமுறிவு, மறுமணம், கைம்பெண் மணம் போன்ற பல்வேறு உரிமைகளும் பெண்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ளது. உடைகளிலும், அணிகளிலும் எளிமைசார்ந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. பெரியாரின் பெண்ணியம் சிந்தனைகள் பெண்களுக்கு நல்வழி காட்டும் என்பது திண்ணம்.